டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 22.04.2025 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 255 - Madurai | Online Edition

# ஒரு வாரத்திற்கு மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஏப்.21

தமிழகத்தில் இன்று முதல் அடுத்த ஒரு வாரத்திற்கு லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. இதன் காரணமாக இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். மேலும் 27ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.



# கலைநிகழ்ச்சி மூலம் விவசாயி அடையாள எண் உருவாக்குதல் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம்



மதுரை, ஏப்.21

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டார வேளாண்மைத் துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் புதிய தொழில் நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு தெருக்கூத்து நிகழ்ச்சியானது 21.4.25 அன்று தோடனேரி, வைரவ நத்தம் மற்றும் வயலூர் ஆகிய கிராமங்களில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மின்னல் கலைக்குழுவினரால் வேளாண் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானிய விபரங்கள் குறித்தும், மண் பரிசோதனை, கோடை உழவு, நுண்ணீர்ப்பாசன திட்டம், உழவன் செயலிபயன்பாடு மற்றும் விவசாயிகள் தரவு தளம் மூலம் அடையாளஎண் உருவாக்குதல், டிஜிட்டல் பயிர் ஆய்வு போன்றவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத் தப்பட்டது. இந்த விழிப்புணர்வு முகாமில் மதுரை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (ம/தி) அ.இராணி, மதுரை மேற்கு வட்டார வேளாண்மை அலுவலர் ம.கனிமொழி, துணை வேளாண்மை அலுவலர் அ.உமா மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் வெ.பிரபு மற்றும் த.அன்புவேல் ஆகியோர் கலந்து கொண்டனர். விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்டப்பணியாளர்கள் எஸ்.கே. ராஜசேகர், வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் மற்றும் ரா.பால முருகன், உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆகியோர் செய்திருந்தனர்.

# மல்லிப்பூவைத் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த வேப்பெண்ணை கரைசல்



மதுரை, ஏப்.21

மதுரை வேளாண்மை கல்லூரியில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவி செ.காயத்ரி, கிராமப்புற வேளாண்மை பணிகள் அனுபவத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டம், செல்லம்பட்டி வட்டம், முதலைக் குளம் கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு மல்லிப்பூவைத் தாக்கும் இலைப்பேன், அஸ்வினி போன்ற பூச்சிகளை கட்டுப்படுத்த வேப் பெண்ணை கரைசல் தயாரிக்கும் முறை பற்றியும் மேலும் அதன் நன்மைகள் பற்றியும் எடுத்துரைத்து செயல் விளக்கம் காட்டினார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# விதை தரம் அறிய விதைப்பரிசோதனை அவசியம்!

தேனி, ஏப்.21

தேனி மாவட்ட விதை பரிசோதனை நிலையம், தேனி விற்பனைக்குழு அலுவலக வளாகத்தின் முதல் தளத்தில் செயல்பட்டு வருகிறது. இங்கு மாவட்டம் முழுவதும் பயிரிடப்படும் அனைத்து வகையான தானிய விதைகள், காய்கறி, பயறு வகை, எண்ணெய் வித்து மற்றும் பருத்தி விதைகள் பரிசோதனை செய்யப்பட்டு ஆய்வறிக்கைகள் வழங்கப்படுகிறது. இங்கு விதைத்தரக் காரணிகளான முளைப்புத்திறன், புறத் தூய்மை, இனத்தூய்மை, விதையின் ஈரப்பதம், பிறரக கலப்பு, பூச்சி மற்றும் நோய்கள் தாக்கப்பட்ட விதைகளின் விபரம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. விதைச்சட்டம் 1966 பிரிவு 7-ன்படி, ஒவ்வொரு பயிருக்கும் குறைந்தபட்ச முளைப்புத் திறன் தரம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி நெல் மற்றும் எள்ளுக்கு குறைந்தபட்ச முளைப்புத்திறன் 80 சத வீதமும் பாசிப்பயறு, உளுந்து, துவரை, தட்டைப்பயறு, அவரை, பீன்ஸ் 75 சதவீதமும், நிலக்கடலை, சூரியகாந்தி, தக்காளி, கத்தரி, கீரைக்கு 70 சதவீதமும், காரட், பீட்ரூட், பாகல், புடலை, பீர்க்கை, சுரை மற்றும் மிளகாய்க்கு 60 சதவீதமும் இருக்க வேண்டும். தரமான விதைகளை பயன்படுத்தும்போது விதை களின் முளைப்புத்திறன் அதிகரிப்பதோடு நல்ல வீரியமான நாற்றுகளும், போதிய பயிர் எண்ணிக்கை பராமரிக் கப்பட்டு அதிக மகசூல் பெறலாம்.

2024-25ஆம் ஆண்டில் 2932 விதை மாதிரிகள் பரிசோதிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 2491 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு 141 விதை மாதிரிகள் தரமற்றவை என்று கண்டறியப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகிப்பது தடுக்கப் பட்டுள்ளது. எனவே, ஒவ்வொரு விவசாயியும் சாகுபடி செய்ய வாங்கும் விதைகளையோ அல்லது தங்கள் கைவசம் உள்ள விதைகளையோ முளைப்புத்திறன் அறிந்து பயன்படுத்த வேண்டும். விதையின் தரம் அறிய ஒரு விதை மாதிரிக்கு ஆய்வுக்கட்டணமாக ரூ.80/- செலுத்த வேண்டும் என்று விதை பரிசோதனை அலுவலர் மகாலெட்சுமி மற்றும் வேளாண்மை அலுவலர் மகிஷா தேவி ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்
# கற்பித்தல் பயிற்சி




கோயம்புத்தூர், ஏப்.21

விரிவாக்கக் கல்வி இயக்குநரகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), கோயம் புத்தூர், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், சென்னை மற்றும் வேல் அமிர்தம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சமூக கல்லூரி, கோயம்புத்தூர் ஆகியவை இணைந்து 'கற்பித்தல் கலை' என்ற தலைப்பில் மாநில அளவிலான பயிற்சிப் பட்டறையை நடத்தின. இப்பயிற்சி 21 மற்றும் 22, ஆகிய நாட்களில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோய–ம்புத்தூரில் உள்ள ஃப்ரீமேன் அரங்கில் நடைபெறுகிறது. இதில் தமிழ்நாடு முழுவதிலுமிருந்து கூட்டுறவு நிறுவனங்களின் முதல்வர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் பொறுப்பு துணைவேந்தர் முனைவர் இர. தமிழ்வேந்தன் அவர்கள் இந்த பயிற்சிப் பட்டறையை 21ம் தேதி அன்று தொடங்கி வைத்தார். தனது தொடக்க உரையில், பாரம்பரிய கல்வி முறைகள் முதல் தற்கால கல்வி முறைகள் வரை கல்வியின் பரிணாம வளர்ச்சியை அவர் விளக்கினார். இன்றைய மாணவர்களின் கற்றலை மேம்படுத்த, பயனுள்ள பழைய கற்றல் முறைகளை நவீன கற்பித்தல் அணுகுமுறை களுடன் ஒருங்கிணைக்க வேண்டும் என்று பங்கேற்பாளர்களை அவர் ஊக்குவித்தார்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூடுதல் பதிவாளர் / நிர்வாக இயக்குநர் முனைவர் கே.சி.ரவிச்சந்திரன் தலைமை உரை யாற்றினார். கூட்டுறவு நிறுவனங்களின் ஆசிரியர்கள் புதிய தலைமுறை மாணவர்களை திறம்பட கையாளுவதற்கு இத்தகைய பயிற்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் வலியுறுத்தினார்.

கோயம்புத்தூர் கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் அழகிரி காந்திகிராமம் கிராமியப் பல்கலைக்கழகத்தின் மேலாண்மைத் துறையின் கூட்டுறவுத் துறைப் பேராசிரியர் முனைவர் சி.பிச்சை, திருப்பூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின்

மேலாண்மை இயக்குநர் பழனிசாமி மற்றும் கோயம்புத்தூர் மத்திய கூட்டுறவு வங்கியின் கூடுதல் பதிவாளர்/நிர்வாக இயக்குநர் ராமகிருஷ்ணன் ஆகியோர் இந்த நிகழ்ச்சியை வாழ்த்திப் பேசினர். முன்னதாக, வேல் அமிர்தம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சமூக கல்லூரி, கோயம்புத்தூரின் இயக்குநர் முனைவர் எம்.கே.சிவா அனைவரையும் வரவேற்றார். கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், விரிவாக்கக் கல்வி இயக்குநரகத்தின் பயிற்சிப் பிரிவு பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ந.ஆனந்தராஜா நன்றியுரை வழங்கினார்.

இந்த விரிவான பயிற்சிப் பட்டறை, கற்பித்தல், கூட்டுறவுகளில் சமீபத்திய போக்குகள், கல்வி உளவியல் மற்றும் கற்பித்தல், கற்பித்தல் முறைகள் மற்றும் கற்றல் முறைகள், தகவல் தொடர்பு மற்றும் விளக்கக்காட்சி திறன்கள், பொதுவான கற்பித்தல் திறன்கள், மன அழுத்தம் மற்றும் தூக்கக் கோளாறுகளுக்கான யோகா, மாணவர் உளவியல், வகுப்பறை மேலாண்மை மற்றும் சுகாதார உளவியல் உள்ளிட்ட பல்வேறு முக்கியமான தலைப்புகளை உள்ளடக்கியது. தமிழ்நாடு முழுவதிலுமிருந்து 56 கூட்டுறவு நிறுவனங்களைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் இந்த பயிற்சி அனுபவத்தின் மூலம் பயனடைந்தனர்.




## நெல் விதையின் தரத்தை கண்டறியும் முறைகள் விழிப்புணர்வு ஏற்படுத்தி வேளாண் கல்லூரி மாணவிகள்



சிவகங்கை, ஏப்.21

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உறுப்பு கல்லூரியான செட்டிநாடு வேளாண்மை கல்லூரியின் இறுதி ஆண்டு S.புதூர் வட்டார குழு மாணவிகள் வி.தரணிகா மற்றும் குருதர்ஷினி வேளாண் அனுபவ பயிற்சியின் ஒரு பகுதியாக கோட்டை நெடு வயலில் நெல் விதையின் தரத்தை கண்டறியும் முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும் நெல் விதையின் முளைப்புத் திறனை உப்பு தண்ணீரையும் முட்டையையும் கொண்டு கண்டறிவது குறித்து ஊர் மக்களுக்கு செயல் விளக்கம் செய்து காட்டினர்.

# விவசாயிகளுக்கு நிலக்கடலை பயிரில் பண்ணைப்பள்ளி பயிற்சி



சேலம், ஏப்.21

சேலம் மாவட்டம், நங்கவள்ளி வட்டார வேளாண்மைத்துறை, அட்மா திட்டத்தின் கீழ் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து பண்ணைப்பள்ளி பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டுள்ளது. கோனூர் மேற்கு, வீரனூர் கிராமத்தில் 25 விவசாயிகளுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் து.ரமேஷ் தலைமையில் பயிற்சி தொடங்கப்பட்டது. செந்தில்குமார், விதைச் சான்று அலுவலர் சிறப்பு விருந்தினாராக கலந்து கொண்டு பயிற்சி வழங்கினார். நிலக்கடலை சாகுபடியில் நிலம் தயாரிப்பு முதல் விதை விற்பனை வரை உள்ள, கடைப்பிடிக்க வேண்டிய தொழில்நுட்பங் களை எடுத்து கூறினார். விதை உற்பத்தி, விதைத் தரம், விதை சேமிப்பு போன்ற தொழில்நுட்பங்களையும் விளக்கினார்.

இப்பயிற்சி வகுப்பில் குமரகரு வேளாண் கல்லூரி மாணவர்களும் கலந்துக் கொண்டு நிலக்கடலையை தாக்கும் பூச்சி மற்றும் நோய் களின் தாக்குதல் அறிகுறி புகைப்படங்கள், அதற்கான தீர்வுகள் பற்றி எடுத்துக்கூறினர். மேலும் விதை நேர்த்தி பற்றி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இப்பண்ணைப்பள்ளிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் செய்திருந்தார்.

# தென்னையில் கரையானை (termites) கட்டுபடுத்தும் பயிற்சியில் வேளாண்புல மாணவிகள்



திருச்சி, ஏப்.21

திருச்சி, தனலெட்சுமி சீனிவாசன் பல்கலைகழக வேளாண் புல மாணவிகள் தா.பேட்டை வட்டாரம் மகாதேவியில் உள்ள பிரபாகரன் என்பவருடைய தென்னை தோப்பில் கரையாண் தாக்குதல் அதிகமாக இருப்பதை கண்டறிந்தனர். பின் அதனை இயற்கை முறையில் கட்டுப்படுத்த வேப்பஎண்ணையை தென்னை மரத்தில் பூசி கரையாணை கட்டுபடுத்தினர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நெற்பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் விரிவாக்கப் பணியாளர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம்



மதுரை, ஏப்.21

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில் தனிச்சியம் கிராமத்தில் நெற்பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் விரிவாக்கப் பணி யாளர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம் 21.4.25ம் தேதி அன்று நடைபெற்றது. இப்பயிற்சி முகாமில் சுமார் 100 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் மு.வசந்த குமார், மத்திய மாநில திட்டங்கள், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் தக்கைப் பூண்டு விதைகள் 50 சத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்குதல், மாநில வேளாண் வளர்ச்சி திட்டம் நெல் நுண்ணூட்டம் வழங்குதல், பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம் பற்றி எடுத்துக் கூறி அனைவரையும் வரவேற்றார்.

உசிலம்பட்டி கிருஷ்ண வேளாண் தொழில்நுட்பக் கல்லூரி பேராசிரியர் டாக்டர்.தெய்வசிகாமணி, திருந்திய நெல் சாகுபடி முறை களான நிலத்தேர்வு, 2 கிலோ குறைவான விதையளவு, உயிரியல் பூஞ்சாண நோய் கட்டுப்பாடு விதை நேர்த்தி, ஒரு செண்ட் நாற்றங்கால், 12-14 வயதுடைய இளநாற்றுகள் நடவு செய்தல், 22.5 X 22.5 செ.மீ இடைவெளி சதுர முறையில் ஒற்றை நாற்று நடவு, பயிர் எண்ணிக்கை பராமரிப்பு, கோனோவீடர் மூலம் களை நிர்வாகம், இலைவண்ண அட்டை கொண்டு தழைச்சத்தை தேவை கேற்ப பிரித்து இடுதல், நீர் மறைய நீர் கட்டுதல், நெற்பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் அதிகம் காணப்படுவதால் ஒருங் கிணைந்த பூச்சி நோய் நிர்வாக முறைகளான கார்பென்டசிம் மற்றும் மேங்கோசெப் கலந்த சாப் பூஞ்சாண கொல்லி மருந்து ஏக்கருக்கு 250 மி.லி தெளிக்கவும், இயற்கை முறைகளான பஞ்ச காவ்யம், வேப்பங்கொட்டை கரைசல் தெளிப்பு, மஞ்சள் வண்ண அட்டை, விளக்கு பொறி, இனகவர்ச்சி பொறி பயன்படுத்துவதோடு இயற்கை திரவ உயிர் உரங்களான திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா ரைசோபியம் ஆகியவற்றினை பயன்படுத்து மாறும் முக்கியமாக விவசாயிகள் அனைவரும் சான்று பெற்ற விதை

களை பயன்படுத்துமாறும் குறைந்த செலவில் அதிக மகசூல் பெற்றிடலாம் என தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் உதவி வேளாண்மை அலுவலர் பால் பாண்டி, வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். பயிற்சியின் முடிவில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை முறைகள் குறித்த தொழில்நுட்ப கருத்துக்கள் அடங்கிய பயிற்சி கையேடு, மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் உளுந்து, சூடோமோனாஸ், திரவ உயிர் உரங்கள் அடங்கிய குறுவை தொகுப்பு கிட் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

விஞ்ஞானிகள் விரிவாக்கப் பணியாளர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாமில் நெற்பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகள் பேரணி நடைபெற்றது. பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உரையாற்றிய அலுவலர்களுக்கும் உதவி வேளாண் அலுவலர் ப.பால்பாண்டி நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் பா.வேல்முருகன், சௌந்தராஜன் மற்றும் வசந்தி ஆகியோர் செய்திருந்தனர்.

## நோய்கள் இல்லா நெற்பயிருக்கு பாசிலஸ் சப்டிலிஸ் வழிகாட்டி!



மதுரை, ஏப்.21

மதுரை விவசாயக் கல்லூரியில் படிக்கும் 4ம் ஆண்டு மாணவி மு.செ.கீர்த்தனா தேவி, கிராமப் புறத் தங்கல் திட்டத்தின் கீழ் கச்சகட்டி கிராமத்தில் விவசாயிகள் மற்றும் கிராம மக்களுக்கு நெல் விதையில் பாசிலஸ் சப்டிலிஸ் மூலம் விதை நேர்த்தி செய்வது குறித்து ஒரு விளக்க நிகழ்ச்சியை நடத்தினார். அவர், பாசிலஸ் சப்டிலிஸ்யை விதை நேர்த்தியில் பயன்படுத்தும் முக்கியத்துவம் மற்றும் இது எவ்வாறு நெற்பயிரில் ஏற்படும் நோய்களை கட்டுப் படுத்த உதவுகிறது என்பதையும் விவரித்தார்.

இந்த விதை நேர்த்தி, நெல் பயிரில் ஏற்படும் ரைஸ் பிளாஸ்ட் (Rice Blast), இலையின் உறை அழுகல் (Paddy Leaf Sheath Rot) போன்ற நோய்களை கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. விவசாயிகள் மற்றும் கிராம மக்கள், மாணவியுடன் உரையாடி தங்களது சந்தேகங்களை தெளிவுபடுத்தினர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



சிவகங்கை, ஏப்.21

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், செட்டிநாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயலும் இறுதி ஆண்டு வேளாண் மாணவிகள், மு.பூஜா, பா.பிரியா களப்பயிற்சிக்காக, சிவபுரிப்பட்டி என்ற கிராமத்தில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்து விளக்கம் அளித்தனர். நெற்பயிரை பெரும்பாலும் புகையான், இலை சுருட்டு புழு, நெல் இலைப்பேன், ஆனைகொம்பன், மஞ்சள் தண்டு துளைப் பான், கதிர் நாவாய்ப்பூச்சி போன்ற பூச்சிகள் தாக்கு கின்றன. இந்நிகழ்வில் மாணவிகள் பூச்சி எதிர்ப்பு தன்மை உடைய ரகங்களை பயிரிடுதல், கோடை உழவு செய்தல், வரப்புப் பயிராக – தட்டைப்பயிறு, உளுந்து, சாமந்தி பயிரிடுதல், வரிசை நடவு செய்து பயிர் இடைவெளியை பராமரித்தல் மற்றும் தாவரப்பூச்சி விரட்டி களை பயன்படுத்துதல் குறித்து விவசாயிகள் செல்லப்பா, எழுவக்கன், மூர்த்தி ஆகியோர் முன் விளக்கினர்.

# பசுந்தாள் உரம் மற்றும் இலை உரத்தின் முக்கியத்துவம் விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவி



தேனி, ஏப்.21

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவி மேகவர்ஷினி கிராம தங்கல் திட்டத்தின் கீழ் தேனி மாவட்டம், சில்லமரத்துபட்டியில் பசுந்தாள் உரம் மற்றும் பசுந்தாள் இலை உரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மேலும் அதன் நன்மைகளான மண்ணின் அமைப்பை மேம்படுத்துவது, நீர்ப்பிடிப்பு திறனை அதிகரிக்கிப்பது மற்றும் மண் அரிப்பினால் ஏற்படும் மண் இழப்பைக் குறைப்பது, பருவம் இல்லாத காலத்தில் பசுந்தாள் உரப் பயிர்களை வளர்ப்பது, களை பெருக்கத்தையும் களை வளர்ச்சியையும் குறைப்பது, வேர் முடிச்சு நூற்புழுக்களை பசுந்தாள் உரமிடுவதன் மூலம் கட்டுப் படுத்துவது ஆகியவற்றை எடுத்துரைத்தார். இதில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சமூகம் ஆதரிக்கும் வேளாண்மை (COMMUNITY SUPPORTED AGRICULTURE)

வேளாண்மை ஆதிகாலம் தொட்டு நடைபெற்று வருகிறது. 1960க்கு பின் பசுமை புரட்சி வந்தது. ஒரு உணவு புரட்சியை வேளாண்மையில் ஏற்படுத்தியது இதுவரை வேளாண்மை உற்பத்தி சார்ந்தோ அல்லது சந்தை சார்ந்தோ இருந்து வருகிறது.

தற்போது இயற்கை விவசாயத்தின் மீது மக்களுக்கு அதிக நாட்டம் ஏற்பட்டதன் விளைவாக 'சமூகம் (மக்கள்) ஆதரிக்கும் வேளாண்மையாக மாறி வருகிறது. இந்த நடைமுறை பல வெளிநாடுகளில் குறிப்பாக நெதர்லாந்தில் சிறப்பாக செயல் பட்டு வருவதாக பத்திரிக்கை செய்தி வந்துள்ளன.

**அது எப்படி என்ன? என்பதை பார்ப்போம்.**

இயற்கை வேளாண்மை குறித்து பரவலாக நமது கிராமங் களில் கூட பேசப்பட்டு வருகிறது. நஞ்சில்லா காய்கறிகள், உணவு பொருட்கள் வாங்கிட பலரும் ஆர்வம் காட்டுகின்றனர். என்றாலும் விலை, வினியோகம் (SUPPLY) போன்றவற்றில் பல்வேறு சிக்கல் நிலவுகின்றன. இது போன்ற சிக்கலை தீர்வு காண தான் இயற்கை விவசாயிகள் / உற்பத்தி செய்பவர்களை தனியாகவோ/ கூட்டாகவோ/ சொந்த நிலம் குத்தகை நிலத்தில் சாகுபடி செய்யும் விவசாயிகள் ஒருங்கிணைந்த முறையில் ஒரு அமைப்பு (FPO) ஏற்படுத்தி, செய்தால் நிச்சயமாக நுகர் வோருக்கு வீட்டு வாசலிலே பசுமை மாறாத காய்கறிகள், கீரை கிடைக்கும். இதற்கு முன்னதாக நுகர்வோர்கள் (சமூகம்) தங்களுடைய தேவைக்கேற்ப காய்கறிகள் தானியங்கள் வாங்கிட அந்த அமைப்பிற்கு ஒரு குறிப்பிட்ட தொகையை முன் பணமாக தர வேண்டும்.

**இதில் என்ன எதிர்பார்ப்புகள் உள்ளது?**

தமிழகத்தில் 8 கோடி பேருக்கு தினமும் 1.5 லட்சம் டன் காய்கறிகள் தேவைப்படுகிறது. இதை உடனடியாக இந்த இயற்கை முறையில் உற்பத்தி செய்ய முடியாவிட்டாலும், படிப் படியாக சமூகம் சார்ந்த வேளாண்மையாக மாறும் என்பதில்

ஐயமில்லை. நேரடியாக உள்ளூரில் உற்பத்தி செய்த காய்கறிகள் சுவை மாறாமல் கிராமங்கள் மட்டுமல்லாது நகர்ப் புறங்களிலும் கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். விலை மற்றும் தரத்தில் எவ்வித சமரசம் இல்லாமல் நஞ்சில்லா உணவு பொருட்களை உற்பத்தி செய்து தர வேண்டும். அவ்வாறாக செய்தால் நுகர்வோரின் விருப்பத்திற்கேற்ப விளைபொருட்கள் கிடைப்பதால், விவசாயிகளின் வாழ்வா தாரமும் உயரும், சமூகத்திற்கு நஞ்சில்லா காய்கறிகள், உணவு பொருட்கள் கிடைக்கும். கண்ட கண்ட உரங்களை, பூச்சி மருந்து தெளிப்பது கட்டுபடுத்தப்படுவதுடன் சுற்றுப்புற சூழலும் பாதுகாக்க இந்த சமூகம் சார்ந்த வேளாண்மை வழிவகுக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**




# தென்னை மரங்களுக்கு வேர் மூலம் நுண்ணூட்டம் பற்றிய செயல்முறை விளக்கம்



ஈரோடு, ஏப்.21

ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டத்தில் களப்பயிற்சி மேற்கொண்டு வரும் வேளாண் கல்லூரி மாணவிகள், வரப் பாளையம் கிராம விவசாயி களுக்கு TNAU தென்னை டானிக் பற்றிய செயல்முறை விளக்கத்தை செய்து காட்டினர். 60 ml டானிக்-வுடன் 140 ml தண்ணீர் கலந்து தென்னை மரத்திலிருந்து 2-3 அடி தூரத்தில் உள்ள இளம் வேரில் இந்த தென்னை டானிக்கை கட்ட வேண்டும். இதன் மூலம் தென்னையில் குரும்பை உதிர்வு குறைதல், பருப்பு எடை அதிகரிப்பு, பச்சையம் சத்து அதிகரிப்பு என பல நன்மைகள் உண்டாகும். இந்த டானிக்கை வருடத்திற்கு இருமுறை பயன்படுத்தலாம் எனவும் தெரிவித்தனர்.

# காய்கறிக்கு கை கொடுக்கும் கற்பூர கரைசல் - வேளாண் மாணவிகள் விளக்கம்



சிவகங்கை, ஏப்.21

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், செட்டிநாட்டில் உள்ள அரசு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் இறுதியாண்டு வேளாண் மாணவிகள் ந.ரித்திகா, கி.ரம்யா கிருஷ்ணன் ஊரக வேளாண்மை அனுபவ பயிற்சி திட்டத்தின் கீழ் எருமைப்பட்டி என்ற கிராமத்தில் தங்கசாமி என்ற விவசாயின் நிலத்தில் உள்ள காய்கறி பயிர்களில் பூச்சி தாக்குதல்களை கட்டுப் படுத்தவும், பயிர் ஊக்கியாகவும் கற்பூர கரைசலை பயன்படுத் தினால் நல்ல பலன் கிடைப்பதாக விவசாயிக்கு தெரிவித்தனர்.

பூச்சி தாக்குதலால், விளைச்சல் பாதிக்கப்படுகிறது. இதற்காக, விவசாயிகள் ரசாயன பூச்சி கொல்லிகள் அதிகம் பயன்படுத்து கின்றனர். இதனால், விளைபொருட்களில் ரசாயனம் படிவதுடன், உற்பத்தி செலவும் அதிகரிக்கிறது. இதற்கு தீர்வாக, கற்பூர கரைசலை பயன்படுத்தி தீர்வு பெறலாம் என்றனர். கற்பூர கரைசல் தயாரிக்க, 100 மில்லி வேம்பு எண்ணெய், மாட்டு கோமியம், பயிரின் வயதுக்கு ஏற்ப கற்பூர வில்லைகள்.கத்தரி, வெண்டை போன்ற பெரிய பயிர் செடிகளுக்கு வெயில் காலங்களில் எட்டு வில்லைகள், வெயில் குறைவான காலங்களில், 10 வில்லைகள் வரை கொடுக் கலாம். கற்பூரம் தண்ணீரில் கரையாது, கரும்பு ஆலைகளில் இருந்து கழிவாக கிடைக்கும் எத்தனால் அல்லது நீலகிரி தைலத்தில் கற்பூரத்தை கரைக்கலாம். வேம்பு எண்ணெயுடன் சாம்பூ, காதி சோப் ஏதாவது ஒன்றை கலந்து, திட நிலைக்கு மாற்றிக் கொள்ள லாம். வேம்பு எண்ணெய் கலவை, கற்பூர கரைசல், ஒரு ஸ்பூன் மஞ்சள் தூள், 1.5 ஸ்பூன் கிளிஞ்சல் சுண்ணாம்பு கலந்து கொண் டால், கற்பூர கரைசல் முழுமையாக தயாராகி விடும். இதை, தண்ணீரில் கலந்து, ஸ்பிரேயரில் தெளிக்கலாம் என மாணவிகள் விவரித்தனர். இதன் மூலம், பூச்சி தாக்குதல்களை கட்டுப்படுத்த லாம். இந்த கரைசலை பயிர்களுக்கு கொடுப்பதால் பயிர்களின் வளர்ச்சி நன்றாக இருக்கும். மகசூலும் அதிமாக இருக்கும். மிளகாய்க்கு ஆரம்பத்திலிருந்து கொடுப்பதால் முடக்கு நோயை முழுமையாக கட்டுப்படுத்தலாம். உளுந்து பயிரில், அதிகமான பூக்கள் பூக்கும். நிலக்கடலை பயிரில் பூச்சி தாக்குதல்கள் கட்டுப் படும். பருத்திக்கு ஆரம்பத்திலிருந்து கற்பூர கரைசல் கொடுத்தால் காய் துளைப்பான் நோயை முற்றிக்கும் தடுக்கலாம். மாவு பூச்சியை கற்பூர கரைசல் சில மணி நேரத்திற்குள் கட்டுப்படுத்திவிடும் என விவசாயிக்கு செயல்முறை விளக்கம் செய்து காட்டினர்.



100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# அங்கக பொருட்கள் சான்றளிப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது



சேலம், ஏப்.21

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரத்தை சார்ந்த 40 விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் கீழ் அங்கக பொருட்கள் சான்றளிப்பு குறித்த பயிற்சி முகாம் சித்தர் கோவில் வனவியல் விரிவாக்க மைய வளாகத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி தலைமையில் நடைபெற்றது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்று இப்பயிற்சியின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் பற்றி கூறினார். பயிற்சியாளராக விதை சான்றளிப்பு அலுவலர் டி.சரவணன் கலந்து கொண்டு தமிழ்நாடு அங்கக சான்றளிப்பு துறை மூலம் இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட உணவுப் பொருட்கள், பழங்கள், காய்கறிகள், தேன், தேங்காய் பால், பச்சரிசி, மசாலாப் பொருட்கள், கசகசா, மல்பெரி இலைகள், தேயிலை, தேங்காய் எண்ணெய், சோப்பு, சோற்றுக்கற்றாளை போன்றவைகளுக்கு சான்றளிப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், சான்று பெற விவசாயிகள் அங்கக சான்றளிப்பு துறையில் தனி நபராகவோ அல்லது குழுவாக பதிவு செய்தல், சான்றளிப்பு நடை முறைகள் மற்றும் சான்றிதல் வழங்குதல் பற்றியும், அங்கக வேளாண்மையின் நன்மைகள் குறித்தும் விரிவாக எடுத்து கூறினார்.

வனச்சரகர் ஆர்.வீரமணி, தேக்கு, மா, புளி, சந்தனம், மகோகனி உள்ளிட்ட மர வகைகளின் நாற்று உற்பத்தி, நாற்றங்கால் பராமரிப்பு, பூச்சி நோய் பராமரிப்பு, நடவு முறைகள் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்தும் வனவர் எஸ்.மனோஜ் காட்டுபன்றி, மயில் மற்றும் குரங்கு ஆகிய விலங்குகளிடம் இருந்து பயிர்களை பாதுகாக்கும் முறைகள் குறித்தும் எடுத்து கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர் ப.கிருஷ்ணமூர்த்தி, உதவி விதை அலுவலர் ப.மூர்த்தி, உதவி வேளாண்மை அலுவலர் கே.பழனிசாமி, எம்.தினேஷ், உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்துசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். பயிற்சி முடிவில் மதிய உணவு வழங்கப்பட்டது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# இலை வண்ண அட்டை குறித்து விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, ஏப்.21

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இறுதியாண்டு மாணவி ஹேம ஸ்ரீ கிராம தங்கள் திட்டம் மற்றும் கிராமப்புற அனுபவத்திட்டத்தின் கீழ் தனக்கு ஒதுக்கப்பட்ட கிராமமான நாவினி பட்டியில் இலை வண்ண அட்டை குறித்து விளக்கினார். இது பயிரின் தேவை யறிந்து உரமிட பயன்படுத்துகிறது இதில் ஒன்று முதல் ஐந்து பசுமை நிற அட்டைகள் உள்ளன. நெல்லின் தழைச்சத்து மேலாண்மை குறித்து இலை வண்ண அட்டை மூலம் முடிவு செய்யப்பட்ட அளவிடப்பட்ட எண் வைத்து முடிவு செய்யப்படு கிறது. இந்த செயல் முறையை விவசாயிகள் மற்றும் பொது






மக்களிடையே தெளிவாக தெரிவித்தார் வண்ண அட்டையை கொண்டு இலையின் வண்ணத்தை ஒப்பிடும்போது சூரிய வெளிச்சம் இலையில் நேரடியாக படாதவாறு அளவிடுபவர் இருக்க வேண்டும். இலையின் பச்சைய அளவை மதிப்பிடுவது நடவு நட்ட 14ஆம் நாளிலிருந்து அல்லது விதைத்த 21-ம் நாளில் இருந்து ஒவ்வொரு வாரமும் செய்யப்பட வேண்டும் மதிப்பீடு செய்ய ஏற்ற இலை முழுதாய் வெளிவந்துள்ள இலை களில் மேலிருந்து மூன்றாவது ஆகும் மதிப்பீடு செய்ய குறைந்த பட்சம் பத்து இலைகள் இங்கும் அங்கும் ஆக தேர்வு செய்யப்பட வேண்டும்.

அளவிடும் காலம் பொதுவாக ஒரு பயிருக்கு ஒரு குறிப்பிட்ட நேரமாக இருத்தல் வேண்டும். காலை 8 முதல் 10 மணிக்குள் இதை நாம் செய்ய வேண்டும். அளவிடும் காலம் பொதுவாக ஒரு பயிருக்கு மாறும் அளவீடு என்ற ரகத்திற்கு ஏற்றவாறு வேறுபடுகிறது. அதிக தழைச்சத்தை தாங்க முடியாத ரகங்கள் அதாவது பொன்னி மூன்று என்றும் மற்ற ரகங்களுக்கு நான்கு ஆகும்.

# வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இடுப்பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி



கடலூர், ஏப்.21

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தா சலத்தில் 21.4.25 அன்று விவசாயி களுக்கு பண்ணை இயந்திரம் இடுப்பொருட்கள் மற்றும் செயல்விளக்கம் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தி லிருந்து விரிவாக்க கல்வி இயக்குநர் முனைவர் பி.பொ. முருகன், இந்நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டு தலைமை உரை யாற்றி இடுப்பொருட்கள் வழங்கினார். இப்பயிற்சியை வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன், துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் மற்றும் தலைவர், மண்டல ஆராய்ச்சி நிலையம், முனைவர் ரெ.பாஸ்கரன், நேரடி நெல் விதைப்பில் களை நிர்வாகம் பற்றி எடுத்துரைத்தார். திருவண்ணாமலை வேளாண் கல்லூரி மாணவிகள், உயிரி கரிமம் பற்றிய விழிப்புணர்வு கொடுத்தனர். இப்பயிற்சியில் உயிர்கரி – விவசாய கழிவில் இருந்து கிடைக்கப் பெறும் கரி, தென்னை மர கழிவு சார்ந்த நார் – மட்டை போன்றவற்றை பாய்லர் என்றும் காய்ச்சும் இயந்திரம் கொண்டு கரிப்பொருளை பொடிக்கும் இயற்திரம் கொண்டு அதனை துகளாக்கி யூரியா உடன் கலந்து பயிருக்கு அழிக்கும் போது உர செலவு குறைவதுடன் மண்ணுக்கு உயிரி கரிமசத்து அதிகரித்து மண் வளம் பாதுகாக்கப்படுகிறது. எண்ணெய் பிழி இயந்திரத்திரத்தில் மணிலா மற்றும் தேங்காய் பயன்படுத்தி பிழியும் முறையை செயல்விளக்கமாக காண்பிக்கப்பட்டது. தார்பாலின், மண்வெட்டி, எண்ணெய் பிழி இயந்திரம், நேரடி நெல் விதைப்பு உருளை இயந்திரம், கோனோகளை எடுக்கும் கருவி ஆகியவை பட்டியல் இன மக்களுக்கு வழங்கப்பட்டது. முனைவர் சுகுமாறன் (சுற்றுச்சுழலியல்), இணைப்பேராசிரியர் முனைவர் ஜெயகுமார் (நூற்புழுவியல் துறை), முனைவர் பாரதிகுமார் (பயிர் மரபியல் துறை), முனைவர் காயத்ரி (நுண்ணு யிரியல் துறை), முனைவர் கலைச்செல்வி (உழவியல் துறை) பயிற்சியில் கலந்துக் கொண்டனர். பேராசிரியர் முனைவர் சு.கண்ணன், நன்றியுரை வழங்க, கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.



இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விவசாயிகளுக்கு பீஜாமிர்தம் செய்து காட்டிய வேளாண் மாணவிகள்



புதுக்கோட்டை, ஏப்.19

காரைக்குடி சேதுபாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த நான்காம் ஆண்டு மாணவிகள் சா.ஹரிராகவி, மா.அஸ்மா மெஹபூப், த.சு.ஸ்டெனி, ம.பிரனாலி பிரியதர்ஷினி, சி.தேவ தர்ஷினி, பொ.சு.செர்லின், வ.நிகிதா, மு.சோனிசா ஆகியோர் கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தை மேற்கொண்டனர். இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பீஜாமிர்தம் என்னும் இயற்கை உரத்தை மாணவிகள் தயாரித்துக் காட்டினர். இவ்வுரத்தை நாத்து நனைத்தல் மற்றும் விதை நேர்த்தி ஆகியவற்றுக்கு பயன்படுத்தலாம் என்பதை விளக்கினர்.

# நெல் வயலில் மீன் வளர்க்கும் விவசாயி உடன் வேளாண் கல்லூரி மாணவிகள் கலந்துரையாடல்



தஞ்சாவூர், ஏப்.21

தஞ்சாவூர் டாக்டர் எம்.எஸ்.சுவாமி நாதன் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதி ஆண்டு படிக்கும் மாணவிகள், புதுக்கோட்டை மாவட்டம் சேர்ந்தங் கரை கிராமத்தில் நெல் வயலில் மீன் வளர்த்து அசத்தி வரும், வேளாண் செம்மல் விருது வாங்கிய பொன்னையாவை சந்தித்து மீன் வளர்ப்பினை பற்றி அறிந்து கொண்டனர். தற்போதைய இளம் தலைமுறைக்கான முன் உதாரணமாக விளங்கும் பொன்னையாவை சந்தித்து உரையாடி, மீன் வளர்ப்பு, நீர் வேளாண்மை மற்றும் அதன் முக்கியத்துவத்தை பற்றி கற்றுக் கொண்டனர். இதில் மாணவிகள் ஸ்ரீநிதி, ஸ்ரீவர்ஷினி, தமிழ் இனியாள், ஸ்வேதா, ஸ்வேதா முருகன் வைஷ்ணவி, வைஷ்ணவி பிரகாசம், யாழினி, சுவாதீஸ்வரி பங்கேற்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# வேளாண் மாணவர்கள் கள ஆய்வு!



தஞ்சாவூர், ஏப்.21

தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளியில் தனலெட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேளாண் இறுதியாண்டு பயிலும் மாணவர்கள் வேளாண்மையில் அரசு சாரா நிறுவனம் பற்றியும், அதன் பயன்கள் பற்றியும் ஆய்வு மேற்கொண்டனர். கருணாமூர்த்தி சேர்மன், வேளாண் இணை இயக்குனர் வித்யா ஆகியோர் பேசினர். கல்லூரி குழு மாணவர்கள் மிதுன்ராஜ், சேரன், ஜீவானந்தா, ஆகாஷ், கோகுல் பிரசந்த், கோகுல் சந்தோஷ், யுவராஜ், ஸ்ரீராஜ்ஹரன், பகலவன், விஜயகுமார் மற்றும் ராஜேஷ் அரசு சாரா நிறுவனம் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் ஆய்வு மேற்கொண்டனர். மாணவர்களுக்கு கருணாமூர்த்தி சார்பில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

# விளக்கு பொறியின் பயன்பாட்டை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவிகள்



சிவகங்கை, ஏப்.21

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உறுப்பு கல்லூரியான வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், செட்டிநாடு கல்லூரியில் பயிலும் இறுதியாண்டு மாணவிகள் நா.அப்சான் பானு மற்றும் மீ.பாலசுப்பு லெட்சுமி S.புதூர் வட்டாரத்தில் மேலவண்ணாரிருப்பு கிராமத்தில் சிவலிங்கம் என்பவரின் தோட்டத்தில் பூச்சிகளின் தாக்குதல் குறிப்பாக இரவு நேர பூச்சிகளின் தாக்குதலை குறைக்கும் வகையில் விளக்கு பொறியின் பயன்பாட்டையும் மேலும் அதன் முக்கியத்துவத்தையும் விவசாயிகளிடம் செயல்விளக்கம் மூலம் எடுத்துரைத்தனர். விளக்குப் பொறியின் செயல்பாட்டிற்கு மின்சாரம் தேவை. மின்சாரம் தட்டுப்பாடாக உள்ள இடங்களில் சூரிய ஒளியை பயன்படுத்திக் கொள்ளலாம். ஒற்றை நிலைப்பாட்டுடன் கூடிய சூரிய ஒளி பொறி என்பது பூச்சிக் கட்டுப்பாட்டுக்கான ஒரு சாதனமாகும். இந்த சாதனம் பகல் நேரத்தில் சூரிய ஒளியைப் பயன்படுத்தி சார்ஜ் செய்யப்பட்டு, தீங்கு விளைவிக்கும் பூச்சிகளைப் பிடிக்க விடியற் காலை மற்றும் மாலையில் தானாகவே இயக்கப்படும். சூரிய சக்தியில் இயங்கும் பொறிகள் சுற்றுச்சூழலுக்கு உகந்தவை, செலவு குறைந்தவை மற்றும் எடுத்துச் செல்லக்கூடியவை.

# பீட்ரூட்டில் 'மல்ச்சிங்' பயிற்சி பற்றி செயல் விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



தேனி, ஏப்.21

தேனி மாவட்டம், கம்பம் வட்டாரத்தில், நாராயணதேவன்பட்டி கிராமத்தில், மதுரை வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி நிலையம் நான்காம் ஆண்டு கல்லூரி மாணவி, ம.சஹானா, கிராம அனுபவத்திட்டத்தின் கீழ், செயல் விளக்கம் ஒன்றை பீட்ரூட்டில் அளித்தார்.

பீட்ரூட்டில் 'மல்ச்சிங்' எனப்படும் மூடாக்கு பயிற்சி செய்வதன் மூலம் களைகளின் எண்ணிக்கை குறையும், மண்ணின் வெப்பநிலையை ஒழுங்குபடுத்தலாம், ஈரப்பதத்தை பராமரிக் கலாம், மண்ணின் வளம் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கலாம், வேர்-முடிச்சு நூற்புழுவை கட்டுப்படுத்தலாம். அதை வைக் கோல், புல் வெட்டுக்கள், இலைகள், உரம் மற்றும் மரத் துண்டுகள் வைத்து செய்யலாம். பீட்ரூட் நட்டு முடித்த பிறகு மூன்று இலை வந்த நிலையில் 5 cm (2 inches) அளவு அழத்தில் மல்ச்சிங் செய்யலாம்.

# பருத்தி பயிரில் மண் தொப்பி (Earthing Up) செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி

மதுரை, ஏப்.19

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (TNAU) கீழ் இயங்கும் மதுரை வேளாண் கல்லூரியில் நான்காம் ஆண்டு (கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டம் 2025 ) பயிலும் காரியாபட்டி குழுவை சேர்ந்த மாணவி, வீணாஸ்ரீ.மா, தோணுகல் கிராமத்தில் பருத்தி பயிரில் மண் கூழ்வதை (Earthing up) பற்றி ஒரு விளக்க நிகழ்ச்சி நடத்தினார். மண் கூழ்வது என்பது இடைத்தரகு செயலில் ஒன்று ஆகும். இதில் மண்ணை செடியின் அடிப்பகுதியைச் சுற்றி இழுத்து போடுவர்.

இவ்வாறு மண் கூழ்வதின் பல நன்மைகள் உள்ளன: செடியின் நிலைத்தன்மை அதிகரிக்கும். வேர்களின் வளர்ச்சி மேம்படும். நீர்த்தேக்கம் சிறப்பாக நடக்கும்.



100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# மீன் அமினோ அமிலம் மூலம் இயற்கை விவசாயத்தை மேம்படுத்தல் குறித்து வேளாண் கல்லூரி மாணவிகள் விளக்கம்



கடலூர், ஏப்.21

தனலட்சுமி சீனிவாசன் வேளாண் கல்லூரியில் (பெரம்பலூர்) நான்காம் ஆண்டு பயின்று வரும் மாணவிகள் அஷ்வந்தினி, பேபி காவியா, பாலா சகானா, பரணி, பவானி, தாரிகாஷ்ரீ, தேவதர்ஷினி, தனுஸ்ரீ, தரணிபிரியா ஆகியோர் கிராமப்புற வேளாண் பணி அனுபவ திட்டத்தினை (RAWE) பண்ருட்டியில் மேற்கொண்டுள்ளனர்.

அதன் ஓர் அங்கமாக லட்சுமிநாராயணபுரம் கிராமத்தில் உள்ள விவசாயி ரமேஷ் உதவி உடன் மீன் அமினோ அமிலம் செய்முறை விளக்கம், முக்கியத்துவம் மற்றும் பயன்கள் குறித்து விளக்கம் அளித்தார்.




### செய்முறை விளக்கம்

மீன் கழிவுகளை 3 மணி நேரத்திற்குள் சேகரிக்க வேண்டும். மீன் கழவுகளுடன் சம அளவில் வெல்லம், நாட்டுச் சர்க்கரை அல்லது கருப்பட்டி ஏதாவது ஒன்றை கலந்து கொள்ள வேண்டும். இந்த கலவையை கை அல்லது மரத்தடி உபயோகித்து நன்கு கலந்து விடவும். இதனை சுத்தமான பாத்திரத்திற்கு மாற்றி காற்று செல்லாதா வகையில் மூடவும். 21 நாட்களில் மீன் அமினோ அமிலம் தயாராகிவிடும். அதனை 10 லிட்டர் நீரில் 100 ml அளவில் சேர்த்து பயிர்களுக்கு உபயோகிக்கலாம்.

# திராட்சையின் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் குறித்து வேளாண் கல்லூரி மாணவி பயிற்சி



தேனி, ஏப்.21

கிராமப்புற விவசாயப்பணி அனுபவத் திட்டத்தின் கீழ், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவி ச.சக்தி, தேனி மாவட்டம், கம்பம் வட்டாரத்தில், சுருளிப்பட்டி கிராமத்தில் உள்ள விவசாய பெருமக்களுக்கு திராட்சையின் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் குறித்து விளக்கம் அளித்தார்.

திராட்சை, அறுவடைக்கு பிந்தைய காலத்தில் அதிகபட்ச இழப்பை கொண்டுள்ளது. ஜூஸ், ஒயின், ஜாம், வினிகர், பெக்மெஸ் மற்றும் ரெசின்கள் போன்ற மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் திராட்சையின் பொருளாதார மதிப்பை அதிகரிக்கிறது. இப்பொருட்கள் சர்க்கரை நோயை கட்டுப்படுத்துவது போன்ற உயர் மருத்துவ பயன்களை கொண்டுள்ளன. புதிய திராட்சை பழங்களை விட மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களின் அடுக்கு வாழ்க்கை அதிகம். மேலும் மதிப்புக்கூட்டப் படுவதால் இவை ஆண்டு முழுவதும் கிடைக்கக் கூடியதாகவும், இதனால் விவசாயிகளின் பொருளாதார நிலையையும் அதிகரிக்க செய்கிறது மற்றும் அவற்றின் தயாரிப்பு போன்றவற்றை பற்றி விளக்கம் அளித்தார்.

# அதிக மகசூல் கொடுக்கும் எத்திரல் செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாகப்பட்டினம், ஏப்.21

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூரில் அமைந்துள்ள வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவிகளான க.அபிதா, வ.அட்சயா, அதிதி யோகநாதன், த.தீபிகா ரஞ்சனி, ரா.தேவதர்க்ஷினி, ச.திவ்யா, வே.கோபிகா, ரா.வசிதா ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத்தின் ஒரு பகுதியாக நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டத்தில் அமைந்துள்ள தேத்தாக்குடி எனும் கிராமத்தில் பந்தல் காய்கறிகளான புடலங்காய், பாகற்காய், பீர்கங்காய், வெள்ளரிக்காய், சுரக்காய் போன்றவற்றில் பெண்

பூக்களை அதிகரிக்கும் எத்திரல் எனும் வளர்ச்சி ஹார்மோனின் செயல்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் அளித்தனர். மேலும் விவசாயிகளுக்கு அவ்விளக்கம் குறித்த நோட்டீஸை கொடுத்தனர். இது விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாகவும் சுலபமாகவும் இருப்பதால் மணவிகளை விவசாயிகள் பாராட்டினர்.




# டி என் ஏ யூகரும்பு பூஸ்டர் பற்றி மாணவர்கள் செயல் விளக்கம்



தஞ்சாவூர், ஏப்.21

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக இயங்கி வரும் தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங் கோட்டையில் அமைந்துள்ள டாக்டர் எம் எஸ் சுவாமிநாதன் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு பயிலும் மாணவர்கள் தங்கள் ஊரக வேளாண் பணி அனுபவம் பெறும் திட்டத்தின் கீழ் கடலூர் மாவட்டம், செம்மண்டலத்தில் அமைந்துள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் தங்கி பயிற்சி பெறுகின்றனர்.

மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சசிகுமார் வழிகாட்டுதலின்படியும் பயிர் வினையியல் உதவி பேராசிரியர் முனைவர் அனிதாவின் ஆலோ சனைப்படி மாணவர்கள் சரண்ராஜ், சாரதி, சீனிவாசன், சித்தார்த். எஸ்.குமார், சிவபிரகாஷ், ஸ்டார்வின், தமிழ்செல்வன் தாமரைச் செல்வன், தரணிதரன், வெங்கட் வாசன், யோகேஸ்வரன் ஆகியோர் பில்லாலி கிராமத்தில் டி என் ஏ யூகரும்பு பூஸ்டர் பற்றி மாணவர்கள் செயல் விளக்கம் அளித்தனர். இதன் பயன்படுத்துவதால் கருமின் வளர்ச்சி மற்றும் இடைக்கணு நீளம் அதிகரிக்கும் போன்ற பல்வேறு பலன்களை மாணவர்கள் எடுத்துரைத்தனர்.